மார்ச் 1ம் தேதி கழகத் தலைவர் –

முதல்வர் பிறந்தநாளை சாதனை விழாவாகக் கொண்டாட வேண்டும்!

திண்டுக்கல் கிழக்கு – மேற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், பிப். 20 - மார்ச் 1ம் தேதி கழக தலைவர், தமிழக முதல்வரின் பிறந்தநாளை சாதனை விழாவாக கொண்டாட வேண்டும் என்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரிய சாமி கழக நிர்வாகிகளிடம் பேசினார்.2026ம் ஆண்டு வரும் சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் தமிழக முதல்வர் போட்டியிடுகிறார் என்று நினைத்து தேர்தல் பணியாற்றி வெற்றியை கழகத்தலைவர் அவர்களின் கரங்களில் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் இ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்தார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழகத்தில் நல்லாட்சி செய்து இந்தியாவே போற்றும் அளவிற்கு உன்னத முதல்வராக இருக்கும் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை கொண்டாடுவது குறித்து வரும் 2026ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் திமுக நிர்வாகிகள் தேர்தல் பணியாற்றுவது குறித்து சம்மந்தமாக

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மேற்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் மோகன் தலைமை தாங்கினார். திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி, பழனி சட்டமன்ற தொகுதி கழக உறுப்பினரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான இ.பெ. செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கழக துணை பொது செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான இபெரிய சாமி பேசும்போது தமிழகத்தில் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு மாவட்டங்களை இரண்டாக பிரித்தாலும், கழக பணி மற்றும் தேர்தல் பணி உட்பட அனைத்து பணிகளிலும் ஒற்றுமையுடன் செயல்படும் திண்டுக்கல் மாவட்டம் திமுக நிர்வாகிகள் அனைவருக்கும் எனது அன்பான வேண்டுகோள் என்னவென்றால் வருகின்ற மார்ச் 1ம் தேதி கொண்டாடப்பட உள்ள உலக தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகர், இந்தியாவே போற்றும் உன்னத முதல்வர் கழகத்தலைவர்

அவர்களின் பிறந்தநாள் விழாவை தமிழகமே திரும்பி பார்க்கும் அளவிற்கு எழுச்சிமிகு விழாவாக கொண்டாட வேண்டும் என்றார். காரணம் அவருடைய சாதனைகளை சொல்லி பொதுமக்கள் மத்தியில் நாம் கொண்டாடும் பிறந்தநாள் விழா வரும் 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலின் மாபெரும் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் . இன்று தமிழக முதல்வரின் நலத்திட்டங்களை அனுபவிக்காத குடும்ம்பங்களே இல்லை என்ற சூழ்நிலை உருவாகிவிட்டது. ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் தமிழக முதல்வரின் நலத்திட்டங்களை பெற்று பயனடைந்து வருகின்றனர். இருந்தாலும் ஒரு சில இடங்களில் மகளிர் உரிமைத் தொகை முதியோர் உதவித்தொகை கிடைக்காமல் இருப்பதை எதிர் கட்சியினர் தேர்தலின் போது பெரிய குறையாக பிரச்சாரம் செய்வார்கள். நாம் அதற்குமுன் அந்தஇடங்களுக்கு சென்று பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அவர்களுடையபிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும். வரும் சட்டமன்ற தேர்தலில் கழகத்தலைவர் யாரை நிறுத்துகிறாரோ அவர் தான் சிறந்த வேட்பாளர் எனக்கருதி நாம் அனைவரும் வெற்றிக்கு அயராது தேர்தல் பணியாற்ற வேண்டும். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 தொகுதிகளில் 4 தொகுதிகளில் வெற்றி பெற்ற நமக்கு இரண்டு அமைச்சரை கழகத்தலைவர் வழங்கியுள்ளார். 7 தொகுதியிலும் மாபெரும் வெற்றி பெற்று அந்த வெற்றியை கழகத்தலைவர் பொற்கரங்களில் நாம் கொடுக்க வேண்டும். அதற்கு நாம் தினசரி அரை மணிநேரம் அதற்காக நேரம் ஒதுக்க வேண்டும் என்றார். இன்றிலிருந்து நாம் தேர்தல் பணியை தொடங்கி 2026ல் கழகத்தலைவர் 200 தொகுதியை இலக்காக நிர்ணயித்து ள்ளார். நாம் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறும் அளவிற்கு உழைக்க வேண்டும். கூட்டணியை பற்றி நீங்கள் கவலைப்படதே வையில்லை. தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த அனைத்து கட்சிகளும் ஒன்றுசேர்ந்து வந்தாலும் நமது கட்சியை வீழ்த்த முடியாது அந்தஅளவிற்கு மக்கள் மனதில் நமது கழகத்தலைவர் ஸ்டாலின் அவர்கள் இடம்பிடித்து விட்டார். முன்னதாக பேசிய உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசும் போது தேர்தல் நேரத்தில் நாம் களப்பணி ஆற்றுவோம். அதற்குமுன் திண்ணை பிரச்சாரத்தில் நமது தேர்தல் பணியை தொடங்குவோம். தெருத் தெருவாக சென்று ஒவ்வொரு மக்களையும்சந்தித்து கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனைகளை எடுத்துசொல்வோம் என்றார். அவருக்கு முன் பேசிய கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில் குமார், நாடாளுமன்ற தேர்தலில் எவ்வளவோ எதிர்ப்புகள், இடையூறுகள் இருந்தாலும் வரலாறு காணாத வெற்றியை பெற்றது போல் 2026 சட்டமன்ற தேர்தலிலும் மாபெரும் வெற்றியை பெறுவோம். நடிகர்களின் பிரச்சா ரத்திற்கு கூட்டம் தான் கூடும். ஓட்டுகள் விழாது. அதை நாம் உணர்ந்து ஒவ்வொரு ஓட்டையும் பாதுகாப்பாக நமது கூட்டணிக்கு கிடைக்கும் படி அயராது உழைக்க வேண்டும் என்றார். ஆலோசனை கூட்டத்தில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மார்க்கிரேட் மேரி, பிலால் உசேன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட திமுக பொருளாளர் சாணார்பட்டி விஜயன், துணை செயலாளர்கள் ராஜாமணி, தாமரை செல்வி, சுந்தர்ராஜன், ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், வீரா சாமி நாதன், கவிதா பார்த்திபன், ஒட்டன்சத்திர நகர செயலாளர் வெள்ளைச் சாமி, திண்டுக்கல் மாநகர மேயர் இளமதிஜோதி பிரகாஷ், துணை மேயர் இராஜப்பா, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், துணை அமைப்பாளர்கள் ப.ராஜேஸ்பெருமாள், மாயக்கண்ணன், மணலூர் மணிகண்டன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், துணை அமைப்பாளர்கள் குட்டி (எ)துரைப் பாண்டி, முத்துக்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுருசாமி, ஆத்தூர் மகேஸ்வரி முருகேசன், திண்டுக்கல் ஒன்றிய பெருந்தலைவர் ராஜா, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பிள்ளையார் நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், நிலக்கோட்டை மணிகண்டன், சௌந்தரபாண்டி, கொடைக்கானல் கருமலைபாண்டி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், மணி, மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகா னந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் சி.ஜானகிராமன், அ.இராஜேந்திர குமார், மா.சந்திரசேகரன், திண்டுக்கல் மேற்கு பகுதி செயலாளர் ப.பஜுலு ல் ஹக், திண்டுக்கல் மாநகர பொரு ளாளர் சரவணன், பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீPராமபுரம் ராஜா, கன்னிவாடி இளங்கோவன், சின்னாளபட்டி மோகன்ராஜ், சித்தையன் கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், பேரூராட்சி மன்ற தலைவர்கள் சின்னாளபட்டி பிரதீபா கனகராஜ், கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலா ராஜா, அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் மணி என்ற நந்தகோபால், பொதுக்குழு உறுப்பினர்கள் கலைராஜன், அக்பர், டென்னிஸ், மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், இளைஞரணியினர், மகளிரணியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

புதிய கல்விக் கொள்கை திணிப்பை எதிர்த்து ஒன்றிய அரசைக் கண்டித்து விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சி சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை தலைவர் பொன்குமார் தொடங்கி வைத்து கண்டன உரையாற்றினார்.

புதிய கல்விக் கொள்கை திணிப்பு - ஒன்றிய அரசைக் கண்டித்து

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம்!

தலைவர் பொன்குமார் கண்டன உரை!

சென்னை, பிப். 20 - புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மும்மொழி திட்டத்தை நடைமுறைப் படுத்த ஒன்றிய மோடி அரசு முயற்சித்து வருகிறது. இரு மொழி கொள்கையை பின்பற்றி வரும் தமிழ்நாடு அரசு எக்காரணத்தைக் கொண்டும் மும்மொழி ஏற்றுக் கொள்ளாது என மறுத்துவிட்டது. இதனால் தமிழ்நாடு அரசுக்கு கல்வி நிதியாக ஒதுக்கப்பட வேண்டிய 2,150 கோடி ரூபாயை ஒன்றிய அரசு ஒதுக்கிடவில்லை.

இது குறித்து கேட்டதற்கு ஒன்றிய கல்வி அமைச்சர் மும்மொழிக் கொள்கை திட்டத்தை ஏற்றுக் கொண் டால் தான் அதாவது இந்தி, சமஸ்கிருத மொழியை கற்பதாக உறுதி அளித்தால்தான் நிதி வழங்கப்படும் என்று ஆணவத்தின் வெளிப்பாடாக அறிவித்தார்.

இதனை தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளும் கண்டித்து வரு கின்றன.

இந்த நிலையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் கள்ளக் குறிச்சியில் 17.02.2025 அன்று ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் மு.வெங்கடேஷ் தலைமை தாங்கினார். மாநில மகளிரணி செயலாளர் ஏ.சித்ரா முன்னிலை வகித்தார்.

தலைவர் பொன்குமார் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து, கண்டன உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெகதீசன், தொழிற்சங்க கூட்ட மைப்பின் பொதுச் செயலாளர் கவிஞர் குருநாக லிங்கம், அமைப்பு செயலாளர் நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசின் ஆணவப் போக்கை கண்டித்து தொடர் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இறுதியாக ஊடகவியலாளர் மத்தியில் தலைவர் பொன்குமார் மத்திய அரசுக்கு விவசாயி கள் தொழிலாளர்கள் கட்சியின் கண்டனத்தை பதிவு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் அதாவது 10 மணி நேரத்தில் ஏற்பாடு செய்த திடீர் ஆர்ப்பாட்டத்தில் சுமார் 500 பேர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களிட்டது சிறப்பு மிக்க ஒன்றாகும்.

பரவை முரசொலி முகவர் சி.கோவிந்தராஜ் - ஜி.செல்வி இல்ல மணவிழா!

ஜி.பி.ராஜா, பி.இராமநாதன், கழகத்தினர் வாழ்த்தினர்!

மதுரை, பிப். 20 - மதுரை மாவட்டம் பரவை முரசொலி முகவர் சி.கோவிந்தராஜ் - ஜி.செல்வி இணையரின் மகன் வழக்கறிஞர் ஜி. மதுசூதனன், மதுரை கே. மணிகண்டன் - சாந்தலட்சுமி இணையரின் மகள் செல்வி எம்.உமா மகேஸ்வரி ஆகியோரின் மணவிழா (16.2. 2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு வாடிப்பட்டி ஸ்ரீ கிருஷ்ண மஹாலில் நடைபெற்றது.

திருமண விழாவை மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி. பி. ராஜா ,பி. ராமநாதன் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர். மணவிழாவில் ஏ.பழனிசாமி, வி.எழிலரசன், என்.எஸ். கார்த்திகேயன், டி.சிவானந்தம், ஜி.காளீஸ்வரன், துரை சரவணன், துரை அன்புச்செல்வன், கே.மணிகண்ட நாயுடு, எம். சாந்தலட்சுமி, சி.கோவிந்தராஜ், ஜி.ஹரி (எ) பாலகுருநாதன், ஜி. முனிசாமி, எஸ்.ஜோதி, வெங்கடேசன், ஜெ. ரேணுகா உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமண வரவேற்பு நிகழ்ச்சி (15.2. 2025) சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

ஆலந்தூர் பகுதிக் கழகக் கூட்டம்!

சென்னை, பிப். 20 – ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க. செயற்குழு கூட்டம் திங்கட்கிழமை மாலை, ஆலந்தூர் கற்பக விநாய கர் கோவில் மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் வே.டில்லிபாபு தலைமையில், பகுதி நிர்வாகிகளான கோ. கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், ஜெயா செல்வம், எம்.சையத் அபுதாகீர் ஆகியோர் வரவேற்பில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஆலந்தூர். ப.குணாளன் ஆலோசனையுடன் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA–2), கழகத் தோழர்கள், அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம்

மாவட்ட அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, பிப்ரவரி 22 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை-18
நாள்- 18.02.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

போலியாக 10.5 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்து

வன்னியர்களை ஏமாற்றியவர் எடப்பாடி பழனிச்சாமி!

ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பெருநற்கிள்ளி ஆலோசனைக் கூட்டத்தில் கடும் தாக்கு!

ரிஷிவந்தியம், பிப். 20 - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின் படி ரிஷிவந்தியம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட முனிவாழை, பாசார், கீழத் தேனூர், லா.கூடலூர், கீழ்ப்பாடி ஆகிய 5 ஊராட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது, ஆலோசனை கூட்டம் ஒன்றிய செயலாளர் பெருமாள் தலைமையில், மாவட்ட பொருளாளர் கோவிந்தராஜ்,

தலைமை பொதுக்குழு உறுப்பினர் சூலாங்குறிச்சி ராஜி, ஒன்றிய அவைத் தலைவர் மண்டகப்பாடி சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர், தொகுதி பொறுப்பாளர் பெறுநற் கிள்ளி கலந்து கொண்டு வாக்குச்சாவடி பாக முகவர்களை ஆய்வு செய்து சிறப்புரையாற்றினார் நமக்கான உரிமைகளை பெற்றுத் தருகின்ற ஒரே அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான், குறிப்பாக தமிழ் நாட்டில் 1967 அண்ணா அவர்கள் காமராஜர் ஆட்சிக்கு முடிவு கட்டிய பிறகு இரண்டு திராவிட கட்சி தான், அதில் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இரண்டு கட்சியும் தமிழகத்தில் மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன.

எந்த ஒரு சாதியும் அரசியலை உருவாக்கி ஆள முடியாது காரணம் கட்டமைப்புக்குரிய சூத்திரம் அப்படி உள்ளது, 1987இல் மருத்துவர் ராமதாஸ் தலைமையில் வன்னியர் இட ஒதுக்கீடு சம்பந்தமாக தொடர் சாலை மறியல் அறிவித்து, அந்த நேரத்தில் அறிவாலயம் திறப்பு விழாவிற்கு சென்று கொண்டு திரும்பிய உடன்பிறப்பகளின் கார்கள் சேதப்படுத்தி மண்டை உடைத்து ரத்தம் சொட்டி 21 பேர் செத்து மடிகிறார்கள்.

89ல் ஆட்சிக்கு வந்த தலைவர் கலைஞர் அவர்கள் தான் மருத்துவர் ராமதாஸ், வாழப்பாடி ராமமூர்த்தி ஆகையோரை கூட்டிக்கொண்டு டெல்லி சென்று இட ஒதுக்கீடு சம்பந்தமாக ராஜீவ் காந்தி சந்தித்து அதன் பிறகு எம்ஜிஆர் சந்தித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை, அதன் பிறகு மருத்துவர் ராமதாஸ் சொன்னார் நான் டெல்லிக்கு போனேன் ராஜீவ் காந்தி முதுகில் குத்தி விட்டார், சென்னைக்கு வந்தேன் எம்.ஜி.ஆர். என் நெஞ்சில் குத்தி விட்டார் என்று பதிவு செய்தார், இரண்டும் கடந்து அதன் பிறகு சமூக நீதி அக்கறை உள்ள தலைவர் கலைஞர் ஆட்சி வந்த பிறகு தான் 20% இட ஒதுக்கீடு தந்தார்கள்.

இன்று வரை எந்த கொம்பனாலும் அதனை ஒன்றும் செய்ய முடியவில்லை, இவைகள் எல்லாம் இளைய தலைமுறைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் தெரிந்து கொள்ள வேண்டும், இட ஒதுக்கீடு போராட்டத்தில் 21 பேர் சுட்டது எம்.ஜி.ஆர். ஆட்சியில், 21 பேர் இறந்தது தி.மு.க. உடன் பிறப்புகள், அந்த இட ஒதுக்கீடு போராட்டத்தில் இறந்தவர்களை சமூக நீதிப் போராளியாக அங்கீகரித்து, அந்த உயிர் நீத்த போராளிகளுக்கு ரூபாய் 3 லட்சம் பணம் முடிப்பு கொடுத்து அந்த குடும்ப த்திற்கு மாதம் ரூபாய் 3000 வழங்கியது நமது கலைஞருடைய அரசு, அதனைத் தொடர்ந்து 91 இல் ஜெயலலிதா ஆட்சி வந்த பிறகு மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை வைத்தார், அதற்கு நீங்கள் எல்லாம் மரவெட்டிகள் என்று பதிவு செய்தார், ஆனால் 96ல் ஆட்சிக்கு வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நீங்கள் எல்லாம் மரவெட்டிகள் இல்லை சமூக நீதி போராளிகள் என்று சொன்னார், 2016 ஜெயலலிதா மறைவிற்கு பிறகு எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி அமைத்த பிறகு போலியாக 10.5 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்து வன்னியர்களை ஏமாற்றிய எடப்பாடி பழனிச்சாமியை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கடுமையாக சாடினார், வன்னியர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஆட்சி நமது தி.மு.க. ஆட்சி தான் அதற்கு ஒரு உதாரணம் தான் தற்பொழுது விழுப்புரம் மாவட்டத்தில் இட ஒதுக்கீட்டில் உயிர் நீத்த 21 சமூக நீதி போராளிகளுக்கு நினைவு மண்டபம் கட்டி அதனை நமது திராவிட மாடல் அரசின் முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரடியாக சென்று திறந்து வைத்தார்கள், அன்று முதல் இன்று வரை திராவிட முன்னேற்ற கழகம் அண்ணா, கலைஞர் அதன் பிறகு மு.க.ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக, உற்ற துணையாக இருந்து வருகின்றார்.

என்று ஆலோசனை கூட்டத்தில் சிறப்புரையாற்றினார், இதில் ஊராட்சி மன்ற தலைவர் கேசவன், ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எல்.ஜி. செந்தில், மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் மாரியம்மாள், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அய்யாசாமி, கிளைக் கழகச் செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், ஆனந்தன், முருகன், ஊராட்சி மன்ற தலைவரின் புதல்வர் ராமச்சந்திரன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சீனிவாசன் ,

கழக தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூரில் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் மற்றும் பயிற்சிகூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது. இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் ஆ.கா.தருண், அன்பகம் இளமாறன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு கருத்துகளை எடுத்துரைத்து, சமூக ஊடக பயிற்சிகளை அளித்தார்கள். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் எஸ்.ராஜேந்திரன், ம.அன்பழகன், க.உமாகன்ரங்கம், கே.ஆர்.திருப்பதி, கவிதா தண்டபாணி, வி.எஸ்.ஞானவேலன், கே.முருகேசன், கே.ஏ.குண சேகரன், டி.அசோக்குமார், அ.மோகன்ராஜ், த.முரளி, ஆ.செல்வராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.வி.கிரிராஜ், சி.செந்தில்குமார், நா.பெ.பிரபு, வி.தமிழ்மணி மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.